**<u>சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)</u>**

**<u>திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்</u>**

**<u>MCOP . No.80/2025</u>**

**<u>நாள் : 27.01.2026</u>**

**ம.சா.** 1 (2–ம் எதிர்மனுதாரர் தரப்பில்) வது நபரின் வாக்குமூலம் (1959)–ம் ஆண்டின் 54 வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.தனபால் | மாவட்டம் | : | திருப்பத்தூர் |
| தந்தை / கணவர் பெயர் | : | திரு.முத்தழகு | வயது | : | 53 |
| ஊர் | : | ஆதியூர் | தொழில் | : | மேஸ்திரி |
| வட்டம் | : | திருப்பத்தூர் | தேசியம் | : | இந்தியன் |

2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

1. விபத்து சமயத்தில் நான் இருசகக்கர வாகனத்தில் பயணம் செய்துகொண்டிருந்தேன் என்றால் சரிதான். மேற்படி வாகனம் எனது நண்பர் பிரபாகரன் என்பவருககு சொந்தமானது என்றால் சரிதான். அந்த வாகனம் Hero Honda Passion Pro வாகனம் ஆகும். அதனை எனது நண்பர் பிரபாகரன் தான் ஓட்டிவந்தார். விபத்தானது 2008 ஆகஸ்ட் மாதத்தில் நடந்தது. இந்த வழக்கானது எனது தவறுகையினால் 01.02.2011 தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அவ்வாறு தள்ளுபடி செய்யப்பட்ட மனுவை மீண்டும் கோப்பிற்கு எடுக்ககோரி 25.01.2022 ம் தேதியில் மனுதாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் 11 வருடம் கழித்து மீண்டும் கோப்பிற்கு எடுக்கும் மனு தாக்கல் செய்துள்ள நிலையில் காவல்துறையினாரிடம் இருந்து உரிய ஆவணங்களும் கிடைக்கப்பெறவில்லை என்றால் சரியல்ல. மேற்படி காலதாமதிற்கான காரணங்களை குறிப்பிடாத வரையில் இந்த மனு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல (மேற்படி கேள்விகள் தொடர்பாக ஏற்கனவே IA மனுவிலேயே தீர்மானிக்கப்பட்ட நிலையில் அதனை எழுப்ப மனுதாரர் தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது).

நான் தாக்கல் செய்துள்ள ம.த.சா.ஆ.1 இன் படி நான் கொடுத்த புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யபப்டடது என்றால் சரிதான். ம.த.சா.ஆ.1 ஆவணத்தில் எனது நண்பர் பிராபகரன் இரவு 9.30 மணிக்கு புறப்பட்டு ஆத்துமேடு அருகே சபாபதி செங்கல் சூலை எதிரில் வேகமாக இருசக்கர வாகனத்தை பிரபாகரன் வேகமாகவும், தாறுமாறாகவும் ஓட்டி சென்று எதிரில் TVS 50 இல் வந்த இருவர் மீது டமால் என்று மோதி இரு வண்டியில் வந்தவர்களும் கீழே விழுந்துவிட்டோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சாட்சி பின்னிட்டு தனக்கு எழுதப்படிக்க தெரியாது என்று கூறுகிறார். TVS 50 வாகனத்தில் வந்த இருவருக்கும் விபத்தினால் காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் படியே பார்த்தாலும் பிரபாகரினின் ஆஜக்கிரதையால் தான் விபத்து ஏற்பட்டதாக கண்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த வகையில் ம.த.சா.ஆ.1 ஆவணம் தவறானது என்றால் என்றால் சரிதான். ஆனால் எனக்கு விபத்தில் காயம்பட்டது உண்மை. விபத்து ஏற்பட்டதை காட்டும் விதமாக ம.த.சா.ஆ.1 ஆவணத்தை தவிர 1 ஆம் எதிர்மனுதாரரால் விபத்து ஏற்பட்டது என்பதை காட்டும் விதமாக எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ம.த.சா.ஆ.3 ஆனது 1 ஆம் எதிர்மனுதாரரின் பெயரோ, வாகனத்தின் பதிவு எண்ணோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் படி எனக்கு ஏற்பட்ட காயம் சாதாரன காயம் என்றால் சரியல்ல. ம.த.சா.ஆ.2 விபத்து பதிவேட்டில் என்னை பரிசோதித்த போது smell of alchohol இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் திருப்பத்தூர் அரசு மருத்துவனையில் அட்மீட்டாகி அன்றைய தினமே டிச்சார்ஜ் ஆகிவிட்டேன் என்றால் சரிதான். ஆனால் மறுநாளே அடுக்கம்பாறை அரசு மருத்துவனையில் அட்மீட்டனேன். ஆனால் ம.த.சா.ஆ.2 ஆவணத்தில் அடுக்கம்பாறை அரசு மருத்துவனைக்கு மேல் சிகிச்சைக்கு பரிந்துரைக்கப்படவில்லை என்றால் சரிதான். ம.த.சா.ஆ.4 இன் படி 9.8.2008 ல் தான் மறுபடியும் சிகிச்சை சேர்ந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் திருப்பத்தூர் அரசு மருத்துவமனையிலிருந்து Refer செய்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் AR Number, விபத்து தேதி, குறித்து அனுப்பட்ட தேதி பற்றி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். விபத்து பதிவேட்டில் வலது கால் முட்டிலும், இடது கால் முட்டிலும் மட்டுமே சிராய்ப்பு காயம் ஏற்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் எனக்கு இடுப்பு எலும்பிலும் முறிவு ஏற்பட்டது என்று சாட்சி தானாக கூறுகிறார். ம.த.சா.ஆ.4–ல் Shoulder மற்றும் clavicial பகுதிகளில் X–Ray எடுக்கப்பட்டு No Bony Injury என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ம.த.சா.ஆ.1, 2 ஆவணத்திற்கும் ம.த.சா.ஆ.4 ஆவணத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. விபத்திற்கு பின்னிட்டு எனக்கு ஏற்பட்ட காயங்களுக்காக தான் 09.08.2008 அன்று மறுபடியும் சிகிச்சை எடுத்துக்கொண்ட நிலையில் ம.த.சா.ஆ.4 வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. அதனால் தான் 10.09.2008 தேதியிட்ட காயச்சான்றிதலில் சாதாரண சொற்ப காயம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது

என்றால் சரியல்ல. அதே போல் ம.த.சா.ஆ.4 ஆவணத்தில் குற்ற எண் குறிப்பிடப்படவில்லை என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. பிரபாகரனுக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் அதை பற்றி தெரியாது. அதேபோல் 1–ம் எதிர்மனுதாருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் அதை பற்றி தெரியாது. அவ்வாறு இருந்திருந்தால் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் ஓட்டுநர் உரிமம் இல்லாததால்தான் அதனை நாளது தேதி வரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்தானது பிரபாகரனின் அஜராக்கிதையால் தான் ஏற்பட்டது என குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1–ம் எதிர்மனுதாரரின் காப்பீட்டு பாலிசியின் கவர் நோட் மட்டுமே தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். காப்பீட்டு பாலிசியை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1–ம் எதிர்மனுதாரரின் வாகனத்தை யார் ஓட்டிச்சொன்றார் என்ற விவரத்தை காட்டும் ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1–ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் உரிமத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனங்களின் ஆய்வறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிரபாகரனுக்கு சொந்தமான வாகனத்தின் இன்சுரன்ஸ் நிறுவனத்தை கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து பிரபாகரனின் அஜராக்கதையால் ஏற்பட்டதால் அவர் மட்டுமே இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் தவிர 1, 2 எதிர்மனுதாரர்கள் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர்கள் அல்ல என்றால் சரியல்ல. பிரபாகரனை கட்சி சேர்க்காததாலும் இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி,
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.